# கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

# வெற்றிடங்கள்

2008ஆம் ஆண்டின் 35ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையில் நிரந்தர பணியாட் தொகுதியில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களுக்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தொழில் விபரங்கள்**

2008ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க கடல் மாசுபடுவதைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுதல்.

### 1. முகாமையாளர் (சட்டம்) HM 1-1 - 01 பதவி

**வெற்றிடம் நிலவும் மாவட்டம் - தலைமை அலுவலகம் (கொழும்பு)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்**

**தகைமைகள்:**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டப் பட்டத்துடன் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

அத்துடன்

பதவிக்கு இயைபான விடயத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பதினைந்து (15) வருடங்கள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

### 2. முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவள அபிவிருத்தி) HM 1-1 - 01 பதவி

**வெற்றிடம் நிலவும் மாவட்டம் - தலைமை அலுவலகம் (கொழும்பு)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்**

**தகைமைகள்:**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / வர்த்தகம் அல்லது இயைபுடைய விடயத்துறைக்குப் பொருத்தமான வேறு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவிக்கு இயைபான விடயத்துறையில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் (Masters) பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான விடயத் துறைக்குப் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பதினைந்து (15) வருடங்கள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

### 3. முகாமையாளர் (இயக்கம்) HM 1-1 - 01 பதவி

**வெற்றிடம் நிலவும் மாவட்டம் - தலைமை அலுவலகம் (கொழும்பு)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்**

**தகைமைகள்:**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சுற்றாடல் விஞ்ஞானம் / கடற்றொழில் மற்றும் சமுத்திர விஞ்ஞானம் / கடல் வள முகாமைத்துவம் / கடற்கரை மற்றும் கடல்வள முகாமைத்துவம் / சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் / விவசாய விஞ்ஞானம் / பிரயோக விஞ்ஞானம் / உயிரியல் / விலங்கியல் மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகள் / உயிரியல் தொழில்நுட்பம் / நீரியல் வள தொழில்நுட்பம் / இரசாயனவியல் / பௌதீகவியல் போன்ற பாடத்துறைகளில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவிக்கு இயைபான விடயத்துறையில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பதினைந்து (15) வருடங்கள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

### 4. முகாமையாளர் (திட்டமிடல்) HM 1-1 - 01 பதவி

**வெற்றிடம் நிலவும் மாவட்டம் - தலைமை அலுவலகம் (கொழும்பு)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்**

**தகைமைகள்:**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பொருளியல் / கணிதம் / வர்த்தகம் / புள்ளிவிபரவியல் / கடல் விவகாரங்கள் / சூழல் முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

பதவிக்கு இயைபான விடயத்துறையில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

மற்றும்

அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்ட நிறுவனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டப்'' பதவியொன்றில் குறைந்தபட்சம் இயைபுடைய துறையில் பதினைந்து (15) வருடங்கள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**பொதுவானவை:**

01. **சகல விண்ணப்பதாரர்களும்**,
    i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
    ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    iii. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
02. 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
03. **சம்பள அளவு :** HM 1-1 : (ரூபா 80,295 - 15x2,270 - ரூபா 114,345)
04. **தகைமை பெறும் தினம்:**

    சேவைக்கு / விண்ணப்பதாரர் நியமிக்கப்படுவதற்கு மேற்கூறிய பதவிகளுக்குத் தேவையான தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் சகல வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே பதவிக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படும்.
05. **நியமனத்தின் தன்மை:**

    நிரந்தப் பதவி. ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) ஊழியரினால் செலுத்தப்படும் 10% த்திற்குப் மேலதிகமாக அதிகாரசபையினால் 15% பங்களிப்பு மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு (ETF) 3% மேலதிக பங்களிப்பு வழங்கப்படும்.
06. **விண்ணப்பங்களை அனுப்புதல்:**

    1) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை A4 அளவிலான தாளின் ஒரு பக்கத்தில் தயாரித்து முதல் பக்கத்தில் தமது பிரத்தியேக விபரங்களையும், இரண்டாம் பக்கத்தில் கல்வித் தகைமைகளையும் மூன்றாம் பக்கத்தில் தொழில்சார் தகைமைகள் மற்றும் தொழில் அனுபவங்களையும் நான்காம் பக்கத்தில் வெளிவாரி செயற்பாடுகளையும் உள்ளடக்கி உறவினர் அல்லாத இரண்டு (02) சான்றுபகர்வோரின் பெயர்கள் சகிதம் விண்ணபத்தைத் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

    2) அண்மையில் பெற்றுக்கொண்ட 2 நன்னடத்தை சான்றிதழ்கள், கிராம சேவகரின் சான்றிதழ், பொலிஸ் அறிக்கை, தேசிய அடையாள அட்டை, சகல கல்விச் சான்றிதழ்கள், ஏனைய தகைமைகளை உறுதி செய்வதற்கான சான்றிதழ்களின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதிகளை இணைத்து பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை 2024-06-13ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, இல. 177, நாவல வீதி, நாராஹென்பிட்டி, கொழும்பு 05 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். நேர்முகத் தேர்வில் தேசிய அடையாள அட்டை மற்றும் மேற்கூறிய புகைப்படப் பிரதிகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்களின் மூலப் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

    3) ஒன்றுக்கும் மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

    4) அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் மற்றும் நியதிகள் சட்டசபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

    5) சகல விதத்திலும் முழுமையற்ற, அடிப்படைத் தகைமைகள் இல்லாத, குறித்த சான்றிதழ்களின் சான்றுபடுத்திய புகைப்படப் பிரதிகள் இணைக்கப்பட்டிராத அல்லது நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அறிவிக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்துபோகும் விண்ணப்பங்கள் தொடர்பில் எமது அதிகாரசபை பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,**
**இல. 177, நாவல வீதி, நாராஹென்பிட்டி,**
**கொழும்பு 05.**
**2024-05-31**